

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சென்னை கோயம்பேடு வணிக வளாக கட்டிடத்தில் (CMDA Building) வாடகை அடிப்படையில் இயங்கி வந்துதது. தற்போது வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் சென்னை சி.ஐ.டி நகரில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு வாரிய தலைமையகத்தை இடம் மாற்றம் செய்துள்ளது. வாரிய தலைமையகம் தனக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருவதால் தமிழகமெங்கும் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் பல்வேறு நகரங்களை உருவாக்க கருவாகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயர் சூட்டி அன்னாரின் பெயருக்கு புகழ் சேர்த்திடுமாறு வீட்டு வசதித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சிமுருகன் ஆகியோரைச் சந்தித்து, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தொ.மு.ச. பொதுச் செயலாளர் கி.தீனதயாளன், மாநில தலைவர் க.ராஜேந்திரன், மாநிலப் பொருளாளர் பி.கிரிகுமார் ஆகியோர் மனு அளித்தனர்.

### திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களின் மகன் மற்றும் மகள்களின் மேற்படிப்பிற்கு கல்வி உதவித் தொகை!

# 600 மாணவர்களுக்கு - ரூ.60 இலட்சத்திற்கான வங்கி வரைவோலைகள்!

## அறநிலையத் துறையில் 21 நபர்களுக்கு உதவி ஆணையர் பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக.15-

**ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் மற்றும் மகள்களின் மேற்படிப்பிற்கான கல்வி உதவித்தொகையாக 600 மாணவர்களுக்கு மொத்தம் ரூ.60 இலட்சத்திற்கான வங்கி வரைவோலைகள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் உதவி ஆணையர் பணியிடத்திற்குத் தேர்வு செய்யப்பட்ட 21 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

அதன் விவரம் வருமாறு :-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.08.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணி புரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் மற்றும் மகள்களின் மேற்படிப்பிற்கான கல்வித் உதவித்தொகையாக 600 மாணவர்களுக்கு மொத்தம் 60 இலட்சம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 10 மாணவர்களுக்கு தலா ரூ.10,000/-க்கான வங்கி வரைவோலைகளை வழங்கினார்.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகப் பணி தொகுதியில் உதவி ஆணையர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 21 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறை தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகளை மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல், ஒருகால பூஜை திட்டம் விரிவாக்கம், அர்ச்சகர் மற்றும் பணியாளர் நலன் காக்கும் புதிய திட்டங்கள் செயலாக்கம், துறையின் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதோடு, சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகளும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் மற்றும் மகள்களின் மேற்படிப்பிற்கான கல்வித் உதவித்தொகை வழங்குதல்

2025 - 2026 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில், "ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்களின் பிள்ளைகள் நலன் கருதி, இவ்வாண்டு 600 மாணவர்களின் மேற்படிப்பிற்காக ஆண்டொன்றுக்கு தலா ரூ.10,000/- கல்வி உதவித் தொகை வழங்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

### பள்ளி – கல்வி மேம்பாட்டு மைய நிதி!

இந்த அறிவிப்பினை செயல்படுத்திடும் வகையில், ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் மற்றும் மகள்களின் மேற்படிப்பிற்காக பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வி மேம்பாட்டு மைய நிதி மூலம் கல்வி உதவித் தொகையினை 600 மாணவர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 10 மாணவர்களுக்கு ரூ.10,000/-க்கான வங்கி வரைவோலைகளை முதலமைச்சர் அவர்கள் இன்று வழங்கினார்.

இதன்மூலம் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் கலை மற்றும் அறிவியல், பொறியியல், மருத்துவம், சட்டம் போன்ற உயர்கல்வி பயிலும் அர்ச்சகர்களின் பிள்ளைகள் பயன்பெறுவர். 2023 - 2024 மற்றும் 2024 - 2025 ஆகிய நிதியாண்டுகளில் இத்திட்டத்தின் மூலம் முதலமைச்சர் அவர்களால் 900 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் உதவி ஆணையர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 21 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்குதல்

இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள சமய நிறுவனங்களை நிர்வகித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல், சொத்துகளை பாதுகாத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வரும் செயல் அலுவலர் மற்றும் உதவி ஆணையர் பணியிடங்களில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நிரப்பப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் செயல் அலுவலர் (நிலை-1, நிலை-3 மற்றும் நிலை-4) பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 194 நபர்களுக்கும், உதவியாளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 184 நபர்களுக்கும், இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 124 நபர்களுக்கும், தட்டச்சர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 143 நபர்களுக்கும் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-3 பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 48 நபர்களுக்கும், என மொத்தம் 693 நபர்களுக்கு ஏற்கனவே பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர் ஆகிய பணியிடங்களுக்கு என மொத்தம் 34 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகப் பணி தொகுதியில் உதவி ஆணையர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 21 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி. பழனி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியில் விளையாட்டு வீரர் – வீராங்கனைகளுக்கு

# தேசிய - சர்வதேசப் போட்டிகளில் பங்குபெற செலவு - பயிற்சி உபகரணங்கள் வாங்க நிதி!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ரூ.23.40 லட்சம் காசோலை வழங்கினார்!

சென்னை, ஆக.15-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியின் கீழ் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு தேசிய, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான செலவுகளுக்காகவும், உயர் பயிற்சி உபகரணங்கள் வாங்குவதற்காகவும், 23-வது ஆசிய மாஸ்டர்ஸ் தடகள சாம்பியன் ஷிப்-2025 போட்டியை நடத்துவதற்காகவும் மொத்தம் 23.40 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டினை விளையாட்டில் முன்னோடி மாநிலமாக உருவாக்கிட தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை ஏற்படுத்தி, விளையாட்டு வீரர், வீராங்கனைகள் வெளிநாடுகளில் நடைபெறும் விளையாட்டு போட்டிகளில் கலந்துகொள்ள செல்வதற்கான தங்குமிட கட்டணம், விமான கட்டணம், உணவு, அனுமதிக்கட்டணம் உள்ளிட்ட செலவுகளை மேற்கொள்ள நிதியுதவி வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பயன்படுத்த விளையாட்டு உபகரணங்களும் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் நிதியுதவி மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 12.8.2025 அன்று தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதியில் தங்கி பயிற்சி பெற்று வரும் கேலோ இந்தியா இளையோர் மும்முறை தாண்டுதல் விளையாட்டு போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற எஸ். ரவிபிரகாஷ்க்கு தடகள விளையாட்டு உபகரணம் வாங்குவதற்காக 1,00,000 ரூபாய்க்கான காசோலையையும், 39வது தேசிய ஜூனியர் தடகளப்போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற ஜே. கோகுல் பாண்டியனுக்கு தடகள விளையாட்டு உபகரணம் வாங்குவதற்காக 70,000 ரூபாய்க்கான காசோலையையும், சர்வதேச பாரா டேபிள் டென்னிஸ் போட்டியில் பங்கேற்பதற்காக 2025 தேசிய பாரா டேபிள் டென்னிஸ் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற செல்வி ஆர். தீபிகா ராணி ராமநாதன், கேலோ இந்தியா பாரா விளையாட்டு போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற ஜி. அவிநாஷ், 2025 தேசிய பாரா டேபிள் டென்னிஸ் போட்டியில் வெள்ளி பதக்கம் வென்ற டி. சரவண குமார் ஆகியோருக்கு தலா 1,50,000 ரூபாய்க்கான காசோலைகளையும், மாநில, தேசிய அளவிலான பாரா தடகளப்போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற லோகேஷ் அவர்களுக்கு உயர்ரக பாரா தடகள உபகரணம் (கார்பன் பிளேடு ரன்னர்) வாங்குவதற்காக 7,20,000 ரூபாய்க்கான காசோலையையும் என 6 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் 13.40 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

23வது ஆசிய மாஸ்டர்ஸ் தடகள சாம்பியன்ஷிப் - 2025 போட்டியை நடத்துவதற்காக மாஸ்டர்ஸ் அத்லெடிக்ஸ் அமைப்பிற்கு 10,00,000 ரூபாய்க்கான காசோலையையும் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தேசிய அளவிலான போட்டியில் பதக்கம் வென்ற பேட்மிண்டன் விளையாட்டு வீரர் கவின் தங்கம், தற்காப்புக் கலையில் (Martial Arts) பதக்கம் வென்ற வீராங்கனை செல்வி பாத்திமா ஆஃப்ஷான் ஆகியோர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

2023-ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியின் கீழ் இதுவரை 3,525 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு தேசிய, சர்வதேச விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்வதற்கான செலவுகளுக்காகவும், உயர் பயிற்சி உபகரணங்கள் வாங்குவதற்காகவும், விளையாட்டு போட்டிகளை நடத்துவதற்காகவும் 23.50 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில்

# 46.5 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்து வரலாற்றுச் சாதனை!

## உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை!

சென்னை,ஆக.15-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் தமிழ்நாடு வரலாற்றில் என்றுமில்லாத சாதனையாக இந்த ஆண்டு 46.5 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்றும், 2025-26 நெல் கொள்முதல் பருவத்தில் 1.9.2025 முதல் நெல் கொள்முதல் தொடங்கப்படும்.! என்றும், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அறிக்கை தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் முதலமைச்சர் தலைமையிலான கழக அரசு பொறுப்பேற்றது முதல் அனைத்துத் தரப்பு மக்களும் சிறப்பான முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். குறிப்பாக நெல் விவசாயிகள் பெரிதும் பயனடைந்துள்ளனர். கழக அரசு பொறுப்பேற்ற ஆண்டில் 2021-22 நெல் கொள்முதல் பருவத்தில் 43.27 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 2024-25 நெல் கொள்முதல் பருவத்தில் தமிழ்நாட்டின் வரலாற்றில் நம் முதல்வர் அவர்களின் பொற்கால ஆட்சியில் என்றுமில்லாத அளவிற்கு நேற்று (13.08.2025) வரை 46.5 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

நம் ஒப்பற்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் தமிழ்நாடு அரசின் ஊக்கத்தொகையாக சன்னரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.70/- ஆகவும் பொதுரகத்திற்கு ரூ.50/- ஆகவும் வழங்கப்பட்டு வந்தது. கடந்த அதிமுக ஆட்சியின் பத்தாண்டுகளில் நெல்கொள்முதலுக்கான மாநில அரசின் ஊக்கத் தொகை உயர்த்தி வழங்கப் படவே இல்லை.

நம் தாயுமானவர் முதல்வர் 2021-22 சந்தைப் பருவத்திற்கு சன்னரகம் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.100/- ஆகவும் பொதுரகத்திற்கு ரூ.75/- ஆகவும் உயர்த்தி வழங்க ஆணையிட்டார்கள். மாநில அரசின் ஊக்கத்தொகை படிப் படியாக உயர்த்தப்பட்டு, தற்போது சன்னரகத்திற்கு குவிண்டாலுக்கு ரூ.130/- ஆகவும் பொதுரகத்திற்கு ரூ.105/- ஆகவும் வழங்கப் பட்டு வருகிறது. கழக ஆட்சி பொறுப்பேற்ற போது சன்னரகம் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.1958/- ஆகவும் பொதுரகம் ரூ.1918/- ஆகவும் இருந்தது. வருகின்ற 2025-26 பருவத்திற்கு முதலமைச்சர் தமிழ்நாடு அரசின் ஊக்கத்தொகையாக குவிண்டால் ஒன்றிற்குச் சன்னரகத்திற்கு ரூ.156/- ஆகவும், பொதுரகத்திற்கும் ரூ.131/- ஆகவும் உயர்த்தி அறிவித்துள்ளார். தற்போது 2025-26 பருவத்திற்கு சன்னரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.2545/- ஆகவும், பொதுரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு ரூ.2500/- ஆகவும் வழங்கப்படும்.

நம் முதல்வர் அவர்களின் 51 மாத கால ஆட்சியில் இதுவரை மொத்தம் 1.83 கோடி மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு 40,440.21 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசின் ஊக்கத்தொகையாக மட்டும் ரூ.1,816.46 கோடி வழங்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி நெல் கொள்முதல் பருவம் அக்டோபர் முதல் நாள் தான் தொடங்கும். செப்டம்பரில் அறுவடையாகும் நெல்லை மழைக் காலத்தில் அக்டோபர் மாதத்தில் வாங்கும் நிலை தான் இருந்தது. இதை மாற்றி செப்டம்பர் மாதமே அக்டோபரில் தொடங்கும் பருவ விலையில் நெல் கொள்முதல் செய்திட நம்முடைய முதலமைச்சர் இந்தியப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதி, அனுமதி பெற்று 2022-2023 ஆண்டு முதல் செப்டம்பரிலேயே கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் செப்டம்பர் முதல் நாளிலிருந்து கொள்முதல் செய்ய ஒன்றிய அரசு அனுமதித்துள்ளது.

"ஒரு நெல் மணி கூட வீணாகக் கூடாது" என்று முதலமைச்சர் அறிவுறுத்தியதால் திறந்த வெளியில் வைக்காமல் மேற்கூரையுடன் கூடிய நவீன நெல் சேமிப்புத் தளங்களில் நெல் சேமிக்கப்படுகிறது.

333 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட

4 இலட்சத்து 3 ஆயிரத்து 350 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 26 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள் தற்போது பயன்பாட்டில் உள்ளன.

25 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் 18 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 2 நெல் சேமிப்பு வளாகங்கள் கட்ட நடவடிக்கையில் உள்ளது.

2025 - 2026 ஆம் ஆண்டில் டெல்டா மாவட்டங்களில்

2 இலட்சத்து 63 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட

20 நவீன சேமிப்பு வளாகங்கள் மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் 49 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 6 நவீன சேமிப்பு வளாகங்கள் என ஆக மொத்தம் 3 இலட்சத்து 12 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 26 நவீன சேமிப்பு வளாகங்கள் 469 கோடியே ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்ட அரசாணை வெளியிடப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

ஆக மொத்தம் இந்த ஆட்சி பொறுப்பேற்றது முதல் இதுவரை விவசாயிகளின் நலனை முன்னிறுத்தி ரூபாய் 827 கோடியே

78 இலட்சம் மதிப்பீட்டில் 7 இலட்சத்து 33 ஆயிரத்து 350 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய

57 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள் கட்டுவதற்கு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதனால் வருங்காலங்களில் திறந்த வெளியில் நெல்லைச் சேமிக்க வேண்டிய தேவை எழாது. இந்த ஆண்டு நெல்வரத்து அதிகமாக வரலாறு காணாத வகையிலிருந்தாலும் எதிர்பாராது அடிக்கடி மழை பெய்தபோதும் நெல்மணிகள் மழையில் நனையாமல் காப்பாற்றப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல்வரத்து அதிகமாக இருந்ததால் சில இடங்களில் தேக்கம் ஏற்பட்டாலும் நெல்லை உடனுக்குடன் அரிசி அரவை ஆலைக்கு அனுப்பப்பட்டு என்றுமில்லாத அளவிற்கு விரைந்து நெல் அரைக்கப் பட்டு வருகிறது.

நெல் விவசாயிகளுக்கு நம் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு என்றும் பாதுகாவலாக இருக்கும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### முதலமைச்சர் கோப்பை போட்டிகள் – 2025

# இணையதள முன்பதிவுக்கு கால அவகாசம் நீட்டிப்பு!

சென்னை,ஆக.15-

தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைப் போட்டிகள் 2025 மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க இணையதள முன்பதிவு (online registration) செய்திட 20.08.2025 வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை 2025 விளையாட்டுப் போட்டிகளுக்கான இணையதள முன்பதிவு (Online Registration) 14.07.2025 முதல் https://cmtrophy.sdat.in/https://sdat.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக முன்பதிவு செய்யப்பட்டு வருகிறது. இதுவரை 10 இலட்சம் போட்டியாளர்கள் முன்பதிவு செய்துள்ளனர். முன்பதிவிற்கான கடைசி நாள் 16.08.2025 என அறிவிக்கப்பட்டிருந்தது. இதுவரை முன்பதிவில் கிடைக்கப்பெற்ற அமோக வரவேற்பினை தொடர்ந்து பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணாக்கர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என அனைத்து பிரிவினரின் வேண்டுகோளுக்கு இணங்க மற்றும் அனைத்து தரப்பு மக்கள் பெருந்திரளாகப் பங்கேற்கும் வகையில் இணையதள முன்பதிவு செய்திட கால அவகாசம் 20.08.2025 தேதி இரவு 8 மணி வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

மாணாக்கர்கள் தாங்களாகவோ, தங்கள் பள்ளி, கல்லூரி மூலமாகவோ முன்பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தங்கள் மாவட்ட விளையாட்டு அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம். "ஆடுகளம்" தகவல் தொடர்பு மையத்தை அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை 9514 000 777 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




ஆஸ்திரேலிய மெல்போர்னில் பெரியார் அம்பேத்கார் சிந்தனை வட்டம் (PATCA), தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நல வாரியத்துடன் (NRTWB) இணைந்து, 2025 ஆகஸ்ட் 10, ஞாயிற்றுக்கிழமையன்று மெல்போர்னில் ஒரு உற்சாகமளிக்கும் நிகழ்ச்சியை நடத்தியது. இந்நிகழ்ச்சியில் NRTWBஇன் தலைவர், கழக சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு வாரியத்தின் பல்வேறு ஆதரவு முயற்சிகளை விரிவாக விளக்கி உரையாற்றினார். PATCAஇன் தலைவர் டாக்டர். அண்ணாமலை மகிழ்நன், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அரங்க.மூர்த்தி, சுரேஷ், ராதிகா, பொருளாளர் திருமலை நம்பி, உறுப்பினர்கள் வசந்தகுமார், இளையமதி, சரவணன் உள்பட 150க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள், சமூகத் தலைவர்கள், அறிஞர்கள் மற்றும் தமிழ் புலம்பெயர் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.